## الدرس السابع
## النار وعذابها

## பாடம் - 7
## நரகமும் அதன் வேதனைகளும்

﴿فَاتَّقُوا النَّارَ الَّتِي وَقُودُهَا النَّاسُ وَالحِجَارَةُ أُعِدَّتْ لِلْكَافِرِينَ﴾ [البقرة:٢٤]

'(நரக)நெருப்புக்கு அஞ்சுங்கள்! (தீய) மனிதர்களும் கற்களுமே அதன் எரிபொருள். (ஏக) இறைநிராகரிப் போருக்காகவே அது தயாரிக்கப்பட்டுள்ளது" என அல்லாஹ் கூறுகிறான்.' (2:24)

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ: نَارُكُمْ جُزْءٌ مِنْ سَبْعِينَ جُزْءًا مِنْ نَارِ جَهَنَّمَ قِيلَ يَا رَسُولَ اللهِ إِنْ كَانَتْ لَكَافِيَةً قَالَ فُضِّلَتْ عَلَيْهِنَّ بِتِسْعَةٍ وَسِتِّينَ جُزْءًا كُلُّهُنَّ مِثْلُ حَرِّهَا . (خ/ ٣٢٦٥، م/ ٢٨٤٣)

நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம், 'நீங்கள் எரிக்கும் இந்நெருப்பு நரகின் நெருப்பில் எழுபது மடங்கு மடங்குகளில் ஒன்றாகும்' என்று கூறினார்கள். உடனே ஷஅல்லாஹ்வின் தூதரே! (பாவிகளைத் தண்டிக்க) இதுவே போதுமே எனத் தோழர்கள் கூறினார்கள். அதற்கு நபி (ஸல்)அவர்கள், '(அவ்வாறல்ல) இந்த உலக நெருப்பை விட நரக நெருப்பு அறுபத்தொன்பது மடங்குகள் அதிகப் படுத்தப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு மடங்கும் உலக நெருப்பின் வெப்பத் திற்குச் சமமானதாகும்' என்று கூறினார்கள். (புகாரி-3265, முஸ்லிம்-2843)

நரகம் ஏழு அடுக்குகளைக் கொண்டதாகும். அதில் ஒவ்வொரு அடுக்கும் மற்றதை விட மிகக் கடுமையான வேதனை உடையதாகும். அதன் ஒவ்வொரு அடுக்கிலும் அதற்குரியவர்கள் அவரவரின் செயல்களைப் பொறுத்து இருப்பார்கள்.

நயவஞ்சகர்கள் நரகத்தின் அடித்தட்டிலிருப்பார்கள். அதுதான் மிகக் கடுமையான வேதனைக்குரியதாகும். (ஏக இறைவனை)மறுத்தவர்களுக்கு நரகத்தில் வேதனை இடைவிடாமல் நிரந்தரமாக இருக்கும். அவர்கள் கரிந்து விடும்போதெல்லாம் வேதனையை அதிகப்படுத்து வதற்காக திரும்பவும் பழைய நிலைக்கு கொண்டு வரப்படுவார்கள்.

﴿كُلَّمَا نَضِجَتْ جُلُودُهُمْ بَدَّلْنَاهُمْ جُلُودًا غَيْرَهَا لِيَذُوقُوا العَذَابَ إِنَّ اللهَ كَانَ عَزِيزًا حَكِيمًا﴾ [النساء:٥٦]

அல்லாஹ் கூறுகிறான்: 'அவர்களின் தோல்கள் கருகும்போதெல்லாம் அவர்கள் வேதனையை சுவைப்பதற்காக வேறு தோல்களை அவர்களுக்கு மாற்றுவோம்.' (4:56)

﴿وَالَّذِينَ كَفَرُوا لَهُمْ نَارُ جَهَنَّمَ لَا يُقْضَى عَلَيْهِمْ فَيَمُوتُوا وَلَا يُخَفَّفُ عَنْهُمْ مِنْ عَذَابِهَا كَذَلِكَ نَجْزِي كُلَّ كَفُورٍ﴾

[فاطر:٣٦]

'(நம்மை) நிராகரித்தோருக்கு நரக நெருப்பு உள்ளது. அவர்கள் மரணிக்கும் வகையில் அவர்களின் கதை முடிக்கப்படவும் மாட்டாது. அதன் வேதனை அவர்களுக்கு குறைக்கப்படவும் மாட்டாது. (நம்மை) மறுக்கும் ஒவ்வொருவருக்கும் இவ்வாறே கூலி வழங்குவோம்.' (35:36)

அதில் அவர்கள் விலங்கிடப்படுவார்கள். அவர்களின் கழுத்துக்களிலும் விலங்கிடப்படும். அல்லாஹ் கூறுகிறான்:

﴿وَتَرَى الْمُجْرِمِينَ يَوْمَئِذٍ مُقَرَّنِينَ فِي الْأَصْفَادِ ، سَرَابِيلُهُمْ مِنْ قَطِرَانٍ وَتَغْشَى وُجُوهَهُمُ النَّارُ﴾

[إبراهيم: ٤٩، ٥٠]

'அந்நாளில் குற்றவாளிகள் சங்கிலிகளால் பிணைத்துக் கட்டப்பட்டிருப்பதை நீர் காண்பீர். அவர்களின் சட்டைகள் தாரினால் தயாரிக்கப்பட்டது. அவர்களின் முகங்களை நெருப்பு மூடிக்கொள்ளும்.' (14:49,50)

நரகவாசிகளின் உணவு ஸக்கூம் எனும் மரமாகும்.

﴿إِنَّ شَجَرَةَ الزَّقُّومِ ، طَعَامُ الْأَثِيمِ ، كَالْمُهْلِ يَغْلِي فِي الْبُطُونِ ، كَغَلْيِ الْحَمِيمِ﴾ [الدُخان:٤٣ –٤٦]

அல்லாஹ் கூறுகிறான்: 'ஸக்கூம் எனும் மரம் பாவிகளின் உணவாகும். அது உருக்கிய செம்பு போன்றிருக்கும். அது கொதிக்கவைக்கப்பட்ட நீர் கொதிப்பதைப் போன்று வயிற்றில் கொதிக்கும்.' (44:43-46)

நரகத்தினுடைய வேதனையின் கடுமையையும் சொர்க்கத்திலுள்ள இன்பத்தின் பெருமையையும் பின்வரும் நபிமொழி தெளிவுபடுத்துகிறது:

عَنْ أَنَسٍ ﷺ قَالَ: قَالَ رَسُولُ الله ﷺ: يُؤْتَى بِأَنْعَمِ أَهْلِ الدُّنْيَا مِنْ أَهْلِ النَّارِ يَوْمَ الْقِيَامَةِ فَيُصْبَغُ فِي النَّارِ صَبْغَةً ثُمَّ يُقَالُ يَا ابْنَ آدَمَ هَلْ رَأَيْتَ خَيْرًا قَطُّ هَلْ مَرَّ بِكَ نَعِيمٌ قَطُّ فَيَقُولُ لَا وَ الله يَا رَبِّ وَيُؤْتَى بِأَشَدِّ النَّاسِ بُؤْسًا فِي الدُّنْيَا مِنْ أَهْلِ الْجَنَّةِ فَيُصْبَغُ صَبْغَةً فِي الْجَنَّةِ فَيُقَالُ لَهُ يَا ابْنَ آدَمَ هَلْ رَأَيْتَ بُؤْسًا قَطُّ هَلْ مَرَّ بِكَ شِدَّةٌ قَطُّ فَيَقُولُ لَا وَالله يَا رَبِّ مَا مَرَّ بِي بُؤْسٌ قَطُّ وَلَا رَأَيْتُ شِدَّةً قَطُّ (م/ ٢٨٠٧)

உலகில் சுகபோகமாக வாழ்ந்த - நரகவாசிகளில் ஒருவன் மறுமையில் கொண்டு வரப்பட்டு நரக நெருப்பில் ஒரு முறை முக்கப்படுவான். பின்பு அவனிடம் 'ஆதமின் மகனே! (உலகில்) ஏதும் நன்மையைக் கண்டிருக் கிறாயா? உனக்கு இன்பம் ஏதும் கிடைத்ததா?' என வினவப்படும். அப்போது அவன் 'என் இறைவனே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! எந்த இன்பமும் எனக்கு கிடைத்தில்லையே' எனக் கூறுவான். இவ்வாறே உலகில் மிகவும் வறுமையிலும் கஷ்டத்திலும் வாழ்ந்த சொர்க்க வாசிகளில் ஒருவர் கொண்டு வரப்பட்டு ஒரே ஒரு தடவை சொர்க்கத்தில் புகுத்தி, பின்னர் 'ஆதமின் மகனே! (உலகில்) வறுமையை நீ கண்டதுண்டா? உனக்கு துன்பம் ஏதும் ஏற்பட்டதுண்டா?' என்று கேட்கப்படும். அதற்கு அவர் 'என் இறைவனே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு எந்த வறுமையும் ஏற்பட்டதில்லை. எந்த துன்பத்தையும் நான் கண்டதில்லை' னக் கூறுவார். (முஸ்லிம்-2807)

நரகத்தில் ஒரு தடவை முக்கியதால் உலகில், தான் அனுபவித்த இன்ப சுகங்கள் அனைத்தையும் இறைவனை நிராகரித்தவன் மறந்துவிடுகிறான். இவ்வாறே ஒரே ஒரு தடவை சொர்க்கத்தில் புகுத்தியதால் உலகில், தான் அனுபவித்த கஷ்டம், வறுமை, துர்ப்பாக்கியம் அனைத்தையும் (ஏக) இறைவனை நம்பியவன் மறந்துவிடுகிறான்.